நகஆ3/21355/2021

மாவட்ட ஆட்சியர் அலுவலம்,
விருதுநகர், நாள்:07.07.2021

## சுற்றறிக்கை

பொருள்: வாரிசு சான்று இணைய வழி வாரிசு சான்று வழங்குவதில் -சில திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: கூடுதல் தலைமை செயலர் மற்றும் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை 9/2019, Rc.No.RA 5(3)/180/2017, நாள்:24.09.2019

----------

பார்வையில் காணும் வருவாய் நிர்வாக ஆணையர் சுற்றறிக்கையில் வாரிசு சான்று வழங்குவது குறித்து திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து வாரிசு சான்றுகள் கோரி ஆன் லைனில் வரப்பெறும் விண்ணப்பங்களை முடிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. பார்வையில் குறிப்பிட்டுள்ள சுற்றறிக்கையின் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேலும் அச்சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு வட்டாட்சியர்கள் கீழ்க்கண்ட இனங்களுக்கு வாரிசுச்சான்று வழங்கக்கூடாது.

1) இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956 பிரிவு 8-ன்படி மறைமுக வாரிசுகள் (அ) பிரிவு II இரண்டாம் நிலை வாரிசுகள்
2) இறந்தவர்களின் உடன்பிறப்புகள் இரண்டாம் நிலை வாரிசுகள்ஆதலால் அவர்கள் வட்டாட்சியரிடம் வாரிசு சான்று கோர இயலாது. ஆனால் அவர்களின் தந்தையார் மற்றும் தாயார் ஆகியோர் வயது முதிர்ந்தவராகவோ, கல்லாதவராகவோ இருக்கும் பட்சத்தில் அவர்கள் வாரிசுச் சான்று பெறும் பொருட்டு வட்டாட்சியருக்கு மனு செய்யலாம்.
3) இறந்தவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியோ/கணவரோ இருக்கும் போது
4) இறந்தவரின் சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சனை ஏற்படும் போது
5) ஒருவர் 7 ஆண்டுகள் காணாமல் போனதாலோ (அ) குடும்பத்தை விட்டுச் சென்றதாலோ இறந்ததாக அறிவிக்கப்பட்ட இனங்கள்.
6) இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925-ன் கீழ் வரக்கூடிய இனங்கள்.

மேற்படி இனங்கள் தொடர்பான மனுக்கள் வட்டாட்சியருக்கு வரப்பெறும் பட்சத்தில் சிவில் நீதிமன்றத்தை அணுகி வாரிசுச் சான்று பெற்றுக் கொள்ளுமாறு மனுதாரருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

இணைப்பு: ஒன்று

(ஒம்/-)இராமங்களராமசுப்ரமணியன்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
விருதுநகர்.

-/ உத்தரவுப்படி/-

7/7/21
அலுவலக மேலாளர்(பொது)

பெறுநர்:
சார் ஆட்சியர்/சிவகாசி
வருவாய் கோட்டாட்சியர்/அருப்புக்கோட்டை, சாத்தூர்
அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள்.

7.7.21